**நகராட்சி அலுவலகம், நரசிங்கபுரம்**
**நாள் :**

**<u>கூட்டப் பொருள்</u>**

நரசிங்கபுரம் நகராட்சி மன்ற கூட்டம் தனி அலுவலர் அவர்களால் 28–06–2019ஆம் தேதி மாலை 4.00 மணிக்கு இந்நகராட்சி அலுவலகத்தில் நடைபெறவுள்ள கூட்டத்தின் மன்றப்பொருள்.

பொருள் : 1

நரசிங்கபுரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 6 வரையுள்ள பகுதிகளில் குடிநீர் குழாய்களில் ஏற்படும் பழுதுகள், பைப்லைன் உடைப்பு மற்றும் கேட்வால்வு பழுதுகள் சரி செய்யும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.**

பொருள் : 2

நரசிங்கபுரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.7 முதல் 12 வரையுள்ள பகுதிகளில் குடிநீர் குழாய்களில் ஏற்படும் பழுதுகள், பைப்லைன் உடைப்பு மற்றும் கேட்வால்வு பழுதுகள் சரி செய்யும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.**

**பொருள் :3**

நரசிங்கபுரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.13 முதல் 18 வரையுள்ள பகுதிகளில் குடிநீர் குழாய்களில் ஏற்படும் பழுதுகள், பைப்லைன் உடைப்பு மற்றும் கேட்வால்வு பழுதுகள் சரி செய்யும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.**

**பொருள் : 4**

நரசிங்கபுரம் நகராட்சியில் 2016–17 மற்றும் 2017–18ஆம் ஆண்டு வரை திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டதற்கு பொதுமக்கள் அறியும் வகையில் மாலை தமிழகம் நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டதற்கு Maalai Tamizhagam என்ற நிறுவனத்திடமிருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளது. பட்டியல் தொகை ரூ.14700/–ஐ வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

பொருள் : 5

நரசிங்கபுரம் நகராட்சியில் ஒருங்கிணைந்த நகர்ப்புற அபிவிருத்தி திட்டத்தின் கீழ் தார்சாலை மற்றும் சிமெண்ட் சாலைப்பணிகள் மேற்கொள்ளும் பணிக்கு பணிக்கு 25.02.2019ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் தினபூமி நாளிதழில் மற்றும் Business Standard ஆகிய நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்டதற்கு AD Vistaa என்ற நிறுவனத்திடமிருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளது. பட்டியல் தொகை ரூ.17588/—ஐ வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

பொருள் : 6

நரசிங்கபுரம் நகராட்சிப்பகுதியில் கீழ்கண்ட இடத்தில் எரிவாயு தகன மேடை அமைக்க விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | நரசிங்கபுரம் நகராட்சிக்குட்பட்ட 5வது வார்டு என்.வி.என் நகர் மயான பகுதியில் எரிவாயு தகன மேடை அமைக்கும் பணி. | 160.00 |

மேற்கண்ட பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி கோரி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு முன்மொழிவு அனுப்ப மன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.**

**பொருள் : 7**

நரசிங்கபுரம் நகராட்சிப்பகுதியில் கீழ்கண்ட இடத்தில் நதிகள் மாசு அடைவதை தடுப்பதற்கு கட்டுமானப்பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | நரசிங்கபுரம் நகராட்சிக்குட்பட்ட 5வது வார்டு விநாயகபுரம் பகுதி, 4வது வார்டு தென்னங்குடிபாளையம் சாலை பகுதி மற்றும் 1வது வார்டு அப்பம்மசமுத்திரம் சாலை பகுதி ஆகிய பகுதிகளில் வசிஷ்டா நதியில் கலக்கும் கழிவு நீரை சுத்திகரிப்பு செய்ய கட்டுமானப்பணிகள் மேற்கொள்ளும் பணி. | 100.45 |

மேற்கண்ட பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி கோரி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு முன்மொழிவு அனுப்ப மன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.**

**பொருள்** : 8

நரசிங்கபுரம் நகராட்சிக்குட்பட்ட அரசு கட்டிடங்களில் மழைநீர் சேகரிப்பு அமைக்கும் பணி, 12வது வார்டு தெற்கு தில்லைநகர் பகுதியில் உள்ள திறந்தவெளி கிணற்றுக்கு கம்பி வலை அமைக்கும் பணி மற்றும் 14வது வார்டு சுறங்கபாதை அருகில் உள்ள திறந்தவெளி கிணற்றுக்கு சுற்று சுவருடன் கம்பி வேலி அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.2.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கு பணியின் அவரசர அவசியம் கருதி நகரமன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டதை மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் : 9**

நரசிங்கபுரம் நகராட்சிக்குட்பட்ட அம்மா உணவகத்திற்கு கேஸ், அடுப்பு, மின்விசிறி, வெயிட் மெஷின் மற்றும் குடிநீர் சுத்திகரிப்பு செய்யும் இயந்திரம் பராமரிக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.50000/– த்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.**

**பொருள் : 10**

**<u>2019–ம் வருடத்திய தமிழ்நாடு சட்டம் 12–ன் கீழ் ஏற்படுத்தப்படும் உப விதிகளின்படி</u>**

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 306 (28A) மற்றும் 2019–ம் வருடத்திய தழ்நாடு சட்டம்12–ன் கீழ் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசபட்ட நெகிழியை (Use and throwaway plastic) சேகரித்தல் (Storage) வழங்குதல் (Supply) கொண்டு செல்லுதல் (Transport) விற்பனை செய்தல் (Sale) மற்றும் பகிர்ந்தளித்தல் (Distribution) ஆகியவற்றை தடை செய்து மேற்கண்ட துணைவிதிகளை மீறுகின்ற நபருக்கு கீழ்கண்ட அபராதம் விதிக்கவும் துணை விதிகள் ஏற்படுத்தவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

1 (i) செயலாக்க அதிகாரி: நகராட்சிப் பகுதிகளில் செயலாக்க அதிகாரி எனப்படுபவர் நகராட்சி ஆணையாளர் ஆவர்.

(ii) ஆய்வு நடத்தும் அதிகாரி: ஆய்வு நடத்தும் அதிகாரி எனப்படுபவர்கள் நகராட்சி பகுதிகளில் துப்புரவு பணிமேற்பார்வையாளர், துப்புரவு ஆய்வாளர், துப்புரவு அலுவலர் மற்றும் ஆணையாளரால் அதிகாரமளிக்கப்பட்ட பிற பணியாளர்களாவர்.

(iii) மேல்முறையீட்டு அலுவலர்: இந்த உபவிதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள பொருளடக்கம் தொடர்பான கருத்துகளில் மேல் முறையீட்டு அலுவலர் ஆணையரே ஆவார்.

(iv) தண்டனைகள் விதிக்கும் முறைகள்: இந்த உபவிதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள விதிகளை மீறுபவர்களுக்கு முதல்முறை இரண்டாம் முறை மற்றும் மூன்றாம் முறையான குற்றத்திற்கு அட்டவணை 2ல் கண்டுள்ளவாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள அபராதத்தை குற்றம் நடைபெறுகின்ற இடத்திலேயே (Spot Fine) வசூலிக்கப்படுவதுடன் தடை செய்யப்பட்ட நெகிழிகள் பறிமுதல் செய்யப்படும். நான்காவது முறையாக மீறுபவருக்கு உடனடியாக தொழில் உரிமம் இரத்து செய்யப்படும்.

**2 வர்த்தக நிறுவனங்களின் வகைப்பாடு**

(i) மொத்தமாக (Whole sale) சேமித்தல் / வழங்குதல் / கொண்டு செல்லுதல் / விற்பனை செய்தல் / பகிர்ந்தளித்தல்.

(ii) வணிக வளாகங்கள், துணிக்கடைகள் பல்பொருள் அங்காடிகள் திரை அரங்குகள், திருமண மண்டபங்கள், மதுபான கூடங்கள், தொழிற்சாலைகள், பள்ளி கல்லூரி நிறுவனங்கள் மற்றும் பெரிய வணிக நிறுவனங்கள்.

(iii) மளிகை கடைகள், மருந்த கடைகள், பழக்கடைகள், காய்கறி கடைகள், இறைச்சி மற்றும் மீன்கடைகள் முதலானவைகள்.

(iv) சிறிய வணிக விற்பனையாளர்கள், தெருவோரக்கடைகள் மற்றும் இதர வணிக நிறுவனங்கள்.

**3. <u>இந்த துணைவிதியை மீறினால் செலுத்தும் அபராதம்</u>**

இந்த துணை விதிகள் தொடங்கிய நாளும் அதற்கு பின்பும் பழக்கப்படும் / எச்சரிக்கை காலம் 30 நாட்கள் ஆகும். அதற்கும் பிறகு இந்த துணை விதிகளை மீறுதல் இருந்தால் அபராத அட்டவணைப்படி இந்த துணை விதி மீறும் நிகழ்வு ஒவ்வொன்றுக்கும் அபராத தொகையுடன் தண்டிக்கப்படுவார். துணை விதிகளை மீறும் யாராவது ஒருவர் அல்லது மாசு படுத்துபவர்

**4.** அட்டவணை IIல் குறிப்பிட்டபடி அபராத தொகை கட்ட இயலவில்லை அல்லது மறுத்தாலோ அவருக்கு எதிராக கடையை / நிறுவனத்தை அல்லது குடோனைப் பூட்டி முத்திரை இடுவதுடன் நகர காவல் சட்டம் / இந்திய குற்றவியல் நடைமுறை சட்டம் / மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 / பொது சுகாதார சட்டம் 1939 ன்படி வழக்கு மற்றும் மேல்நடவடிக்கை எடுக்கப்படும்.

**5. <u>மேல்முறையீட்டு உரிமை</u>**

நரசிங்கபுரம் நகராட்சியின் இந்த துணை விதிகளில் பாதிப்படைந்த யாரும் ஆணையாளருக்கு மேல் முறையீடு செய்ய உரிமையுள்ளவர்கள் ஆவர். இந்த துணை விதிகள் நரசிங்கபுரம் நகராட்சி நகர் மன்றத்தின் உரிய ஒப்புதல் பெற்று நடைமுறைக்கு வந்துள்ளன.

**6. தண்டனைகள் விபரம் :–**

## அட்டவணை II

**பிரிவு 306 (28–A)–ன்படி இயற்றப்பட்ட துணை விதிகளை மீறுவதற்கான தண்டங்கள்**

| வரிசை எண் | குற்றங்கள் | முதன்முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் | இரண்டாம் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் | மூன்றாம் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் |
|---|---|---|---|---|
| i. | பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை சேமித்தல் வழங்குதல் கொண்டு செல்லுதல் விற்பனை செய்தல் மற்றும் பகிர்ந்தளித்தல் | 25000.00 | 50000.00 | 100000.00 |
| ii. | வணிக வளாகங்கள் துணிக்கடைகள் மற்றும் பல்பொருள் அங்காடிகள் போன்ற மிகப்பெரிய வணிக நிறுவனங்களில் பயன்படுத்ப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | 10000.00 | 15000.00 | 20000.00 |
| iii. | மளிகைக்கடைகள் மற்றும் மருந்துக்கடைகள் போன்ற நடுத்தர வணிக நிறுவனங்களில் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | 1000.00 | 2000.00 | 5000.00 |
| iv. | சிறிய வணிக விற்பனையாளர்கள் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | 100 | 200 | 500 |

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. நாளிதழில் விளம்பரம் செய்து பொது மக்களிடமிருந்து வரப்பெறும் ஆலோசனைகள் மற்றும் ஆட்சபனைகளின் மீது இறுதி முடிவு எடுக்க ஆணையாளருக்கு முழு அதிகாரம் வழங்கலாம்.
3. மாவட்ட அரசிதழில் அறிவிப்பு வெளியிட்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
4. விளம்பர செலவுத் தொகை மற்றும் இதர செலவினங்கள் மேற்கொள உத்தேச செலவினத் தொகை ரூ.1.00 இலட்சத்திற்கு மன்றம் அனுமதி வழங்கிடலாம்.

**பொருள் : 11**

நரசிங்கபுரம் நகராட்சியில் உள்ள நரசிங்கபுரம் மேல்நிலை நீர்தேக்க தொட்டி மற்றும் பழைய வீட்டுவசதி வாரியம் மேல்நிலை நீர்தேக்க தொட்டி ஆகிய பகுதிகளில் உள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளுக்கு பம்ப் ரூம் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.**6.25** இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.**

பொருள் : **12**

நரசிங்கபுரம் நகராட்சிக்குட்பட்ட **5**வது வார்டு எம்.ஜி.ஆர் நகர் பகுதியில் உள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றி சுத்தப்படுத்தி கம்பி வேலி அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.**3.50** இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.**

பொருள் : **13**

நரசிங்கபுரம் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள 29 DBC பணியாளர்களை கொண்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி DBC பணியாளர்களின் ஒப்பந்த காலம் 30.06.2019-வுடன் முடிவடைவதால் மேலும் ஒப்பந்த காலத்தை 01.07.2019 முதல் 30.09.2019 வரை நீடித்து கொள்ள ஒரு நாளைக்கு DBC 29x319 = ரூ.9251/-, 30x9251 = ரூ.277530/- x 3 = ரூ.832590/- க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கு பணியின் அவரசர அவசியம் கருதி நகரமன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டதை மன்றம் அனுமதி வழங்கலாம்.

பொருள் : **14**

இந்நகராட்சி **பொது நிதி 2019-20**ல் டெங்கு காய்ச்சல் பரவாமல் இருப்பதற்கு DBC பணியாளர் டெங்கு காய்ச்சல் ஒழிக்கும் பணிக்கு **24.06.2019**ம் தேதி அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

| **வ. எண்** | **வேலையின் விபரம்** | **எண்ணிக்கை** | **செம்பருத்தீ பூ சுபமதி குழு** | **ஓம்சக்தி மகளிர் சுய உதவிக்குழு** | **தூய்மை மகளிர் குழு** |
|---|---|---|---|---|---|
| **1** | டெங்கு கொசுப்புழு தடுக்கும் பணி (ஒரு நபருக்கு) | **1** நாள் | ரூ.**319.00** | ரூ.**340.00** | ரூ.**383.00** |

**அலுவலக குறிப்பு** :

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள **செம்பருத்தீ பூ சுபமதி குழுவின்** விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**பொருள் : 15**

நரசிங்கபுரம் நகராட்சிக்குட்பட்ட 4வது வார்டு அரங்கபாலா நகர் மற்றும் 10வது வார்டு கல்லுடைத்தான் மலை பகுதியில் புதியதாக குடிநீர் குழாய் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.1.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள் : 16

இந்நகராட்சி **பொது நிதி 2019-20-**ஆம் ஆண்டின் கீழ் கீழ்கண்ட பணிகளுக்கு 25.06.2019ம் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ லட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | அதிகம் / குறைவு |
|---|---|---|---|---|
| 1 | நரசிங்கபுரம் நகராட்சிக்குட்பட்ட அரசு கட்டிடங்களில் மழை நீர் சேகரிப்பு அமைக்கும் பணி, 12வது வார்டு தெற்கு தில்லைநகர் பகுதியில் உள்ள திறந்தவெளி கிணற்றுக்கு கம்பி வலை அமைக்கும் பணி மற்றும் 14வது வார்டு சுறங்கபாதை அருகில் உள்ள திறந்தவெளி கிணற்றுக்கு சுற்று சுவருடன் கம்பி வேலி அமைக்கும் பணி. | 2.50 | எஸ்.உமர் பாரூக் | -0.08% குறைவு |
| | | | எஸ்.அபுபக்கர் சித்திக் | 0.50% அதிகம் |

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள **திரு. எஸ்.உமர் பாரூக்** ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்கண்ட பணிகளுக்கு பணியின் அவரசர அவசியம் கருதி நகரமன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டதை மன்றம் அனுமதி வழங்கலாம்.

பொருள் : 17

நரசிங்கபுரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட புத்துமாரியம்மன் கோவில் தெரு மற்றும் 12வது வார்டு திட்டா நகர் ஆகிய பகுதிகளில் குடிநீர் குழாய் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.90000/– த்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள் : 18

இந்நகராட்சி **பொது நிதி 2019-20-**ஆம் ஆண்டின் கீழ் கீழ்கண்ட பணிகளுக்கு **25.06.2019**ம் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ. எ ண்** | **வேலையின் பெயர்** | **மதிப்பீட்டு தொகை (ரூ லட்சத்தில்)** | **ஒப்பந்ததாரர் பெயர்** | **அதிகம் / குறைவு** |
|---|---|---|---|---|
| 1 | நரசிங்கபுரம் நகராட்சிக்குட்பட்ட அம்மா உணவகத்திற்கு கேஸ், அடுப்பு, மின்விசிறி, வெயிட் மெஷின் மற்றும் குடிநீர் சுத்திகரிப்பு செய்யும் இயந்திரம் பராமரிக்கும் பணி. | 0.50 | எஸ்.உமர் பாரூக் | 0.11% குறைவு |
| | | | எஸ்.அபுபக்கர் சித்திக் | 1.10% அதிகம் |

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள **திரு. எஸ்.உமர் பாரூக்** ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்கண்ட பணிகளுக்கு பணியின் அவரசர அவசியம் கருதி நகரமன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டதை மன்றம் அனுமதி வழங்கலாம்.

பொருள் : 19

நரசிங்கபுரம் நகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்டம் விதி – 2016–ன் படி 2019–ஆம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920–ன் பிரிவு 306 (28)–ன் படியும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை சேகரித்தல், வழங்குதல், கொண்டு செல்லுதல், விற்பனை செய்தல் மற்றும் பகிர்ந்தளித்தல் ஆகியவற்றை தடை செய்து மேற்கண்ட துணை விதிகளை மீறுகின்ற நபருக்கு அபராதம் விதிக்கப்படும் என தெரிவிக்க சேலம் மாவட்ட அரசிதழில் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் பிரசுரம் செய்யவும் இதற்குரிய உத்தேச செலவினம் ரூ.1.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதாரப் பணியின் அவரசர அவசியம் கருதி நகரமன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டதை மன்றம் அனுமதி வழங்கலாம்.

பொருள் : 20

நரசிங்கபுரம் நகராட்சி திடக்கழிவு மேலாண்மை மற்றும் கையாழுதல் விதி–2016ன்படி clause Insist to Prepare a Solid Waste Management Policy and Strategy on Solid Waste Management 9Following the SWM Rules 2016) தயார் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.1.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதாரப் பணியின் அவரசர அவசியம் கருதி நகரமன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டதை மன்றம் அனுமதி வழங்கலாம்.